07.05.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## மதுரை மண்ணுக்கேற்ற மரக்கன்றுகள் நட திட்டம்! வனங்களில் உயிரினங்களை காக்க முயற்சி



மதுரை : மதுரையில் இந்த ஆண்டு எதிர்பார்த்ததை விட மழை பெய்ததால் வனப்பகுதிகள் பசுமையாக காட்சியளிக்கின்றன. கடந்த ஆண்டு கோடை தீயால் மரங்கள் எரிந்தன. இந்த ஆண்டு மழையால் வனப்பகுதியில் ஈரப்பதம் அதிகரித்துள்ளதால் காட்டு தீ ஏற்படவில்லை.மாவட்ட வனத்துறை சார்பில் கோடை கால வனப்பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வனம், விவசாய நிலங்கள், சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்படுகின்றன. கடந்த ஆண்டு இறுதியில் வனப்பகுதிகளில் 75 ஆயிரம் மரக்கன்றுகளும், பள்ளி, கல்லூரி மற்றும் சாலை ஓரங்களில் 1.50 லட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டன. தவிர பெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.நிஹார்ரஞ்சன் கூறியதாவது: கோடை காலத்தில் ஏற்படும்

தண்ணீர் தட்டுப்பாட்டால் வன உயிரினங்கள் பாதிக்காமல் இருக்க மதுரை கோட்ட வனப்பகுதிகளில் தண்ணீர் தொட்டிகள், செக் டாம், தண்ணீர் குட்டைகள் அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்த ஆண்டு மதுரை மண்ணிற்கு ஏற்ற மரங்களை வளர்க்க திட்டமிட்டுள்ளோம். மேலும், பொது மக்கள் வனங்களின் சிறப்புகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் வாரந்தோறும் சுற்றுச்சூழல் சுற்றுலா அழைத்து செல்கிறோம்.இதில் பயிற்சி அளிக்கப்பட்ட மலை வாழ் இளைஞர்கள் வழிகாட்டுகின்றனர். இதன் மூலம் அவர்களின் வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது. உலக வன நாள் அன்று 'மதுரை வன நண்பர்கள்' குழு ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இக்குழுவினர் எங்களோடு இணைந்து வன வழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர், என்றார்.

**ஊட்டியில் ரோஜா கண்காட்சி பணிகள் ஜரூர்; கவர போகிறாள் 'நடன மங்கை'**

ஊட்டி : ஊட்டி ரோஜா பூங்காவில் வரும், 9ம் தேதி ரோஜா கண்காட்சி துவங்கவுள்ளது. இதில், ரோஜா பூக்களால் ஆன நடனமங்கை உருவம் வடிவமைக்கப்பட உள்ளது.நீலகிரியில் கோடை சீசன் களை கட்டியுள்ளது. மாவட்ட நிர்வாகம், சுற்றுலாதுறை சார்பில், நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வரும், 9ம் தேதி ஊட்டி அரசு ரோஜா பூங்காவில், காலை 10:30 மணிக்கு, கண்காட்சி துவங்கவுள்ளது.பூங்காவில், 4,000 வகைகளை சேர்ந்த, 27 ஆயிரம் பல வண்ண ரோஜா செடிகள் வளர்ந்து, பார்வையாளர்களை கவர்ந்து வருகிறது. ஆங்காங்கே உள்ள மலர் படுகைகளில், பல வண்ண ரோஜா செடிகள் நடவு செய்யப்பட்டு, அவற்றில் மலர்கள் பூத்துக் குலுங்க துவங்கியுள்ளன.சுற்றுலா பயணிகளை கவரும் நோக்கில், பூங்காவின் முகப்பில் பல வண்ண ரோஜா மலர்களால், நடன கலைஞர் பரத நாட்டியம்

ஆடுவது போன்று வடிமைப்பு செய்யப்பட உள்ளது. ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஹெலிகாப்டர், பார்வைக்கு வைக்கப்பட உள்ளது. காலை முதல் மாலை வரை, இசைக் கச்சேரி, மேஜிக் ஷோ உட்பட மேடை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட உள்ளன. வரும் 10ம் தேதி, நிறைவு விழா நடக்கிறது.ஊட்டி பஸ் ஸ்டாண்டு மற்றும் சேரிங்கிராசில் இருந்து பூங்காவுக்கு சொந்த வாகனங்களில் செல்ல முடியும். அரசு போக்குவரத்து கழகதத்தின் சார்பில், சுற்றுப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

**சோத்துப்பாறை அணையை திறக்க விவசாயிகள் எதிர்பார்ப்பு! பெரியகுளம் பகுதியில் பாசனத்திற்காக காத்திருக்கும் பயிர்கள்**

பெரியகுளம் : சோத்துப்பாறை அணை கோடையில் நிரம்பி பத்து நாட்களாக மறுகால் பாயும் நிலையில் பாசனத்திற்கு திறக்கப்பட வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.சோத்துப்பாறை நீர்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழையால் நீர் மட்டம் உயர்ந்து ஏப்ரல் 27ல் மறுகால் பாய்ந்தது. அணையின் மொத்த உயரம் 126 அடி. தற்போது வினாடிக்கு 10 கனஅடி நீர் வரத்து உள்ளது. அணைக்கு வரும் நீர் முழுவதும் மறுகால் வழியே வெளியேறுகிறது. 2014 அக்டோபர் 23 ல் பானத்திற்காக அணை திறந்துவிடப்பட்ட நிலையில் 2015 ஜனவரி வரை முறைப்பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் தண்ணீர் இருப்பு குறைந்ததால் வினியோகம் நிறுத்தப்பட்டது. பெரியகுளம் பகுதிக்கு குடிநீருக்காக 3 கனஅடி வினியோகம் செய்யப்பட்டது.இந்நிலையில் ஏழு ஆண்டுகளுக்கு பிறகு கோடையில் அணை நிரம்பி மறுகால் பாய்கிறது. அணையில் நீரினால், பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள ஆயிரத்து 825 ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்களும். புதிய ஆயக்கட்டு

பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள ஆயிரத்து 40 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்களும் பயன்பெற்றது. தற்போது சோத்துப்பாறை அணை நீர் பாயும் கண்மாய் பகுதிகளைச் சார்ந்துள்ள நெல், கரும்பு, வாழை உட்பட பலவகையான பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன.அணை திறக்கப்படும் பட்சத்தில் பயிர்கள் விளைச்சல் நல்லமுறையில் இருக்கும். விவசாயிகள் சோத்துப்பாறை அணை எப்போது திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர். பொதுப்பணித்துறையினர் தமிழகஅரசுக்கு தவவல் தெரிவித்துள்ளனர். விரைவில் அறிவிப்பு வரும் என விவசாயிகள் மட்டுமின்றி பொதுப்பணித்துறை அதிகாரிகளும் காத்துள்ளனர்.

**பயிற்சிக்கு பதிவு விவசாயிகளுக்கு அழைப்பு**

வாலாஜாபாத்: சிறு தானிய உற்பத்தி பயிர் சாகுபடி குறித்து, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்ட விவசாயிகளுக்கு, சிறப்பு பயிற்சிகள் காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மையத்தில் அளிக்கப்பட உள்ளது.காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு, சிறு தானியங்கள் உற்பத்தி செய்வது குறித்து, தொழில்நுட்ப செயல் விளக்க பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள், வரும் 15ம் தேதிக்குள், காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் உழவர் பயிற்சி மையத்தில், நேரிலோ அல்லது 99529 16247 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டோ, பதிவு செய்து கொள்ளலாம்.இந்த பயிற்சி முகாமில், சிறு தானிய உற்பத்தி பெருக்குவது குறித்து, விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்படும் என, வேளாண் துறை உழவர் பயிற்சி மைய துணை இயக்குனர் தெரிவித்தார்.

**கோழி தீவனமாகும் மத்தி மீன்கள்**

பழவேற்காடு: தாமதமாக கரைக்கு திரும்பும் படகுகளில் இருந்து கிடைக்கும்

மத்தி மீன்கள், கோழி தீவனமாக மாறுகின்றன.பழவேற்காடு ஏரி மற்றும் கடலில் மீன்பிடிப்பவர்கள் வலையில், மத்தி மீன்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. இவை கேரளாவிற்கு அதிக அளவில் அனுப்பி வைக்கப்படுகின்றன.மத்தி மீன்கள், 50 கிலோ எடை கொண்ட ஒரு பிளாஸ்டிக் பெட்டி, 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கடலில் மீன்பிடித்து, குறிப்பிட்ட நேரத்திற்குள் கரைக்கு திரும்பி, அவற்றை ஐஸ் பெட்டிகளில் அடைத்து விடவேண்டும்.கரைக்கு திரும்புவதில் தாமதம் ஏற்படும்போது, இந்த வகை மீன்கள், அதன் உடல் தளர்ந்து, தரம் குறைந்து விடுகிறது. அதை வாங்குவதற்கு மொத்த வியாபாரிகள் தயக்கம் காட்டுகின்றனர். எனவே, அவை வீணாவதை தடுக்க, ஏரிக்கரையில் உள்ள சிமென்ட் தளங்களில் கொட்டி காயவைத்து, கோழி தீவனத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது. உலர்ந்த மத்தி மீன்களை, கோழி தீவனம் தயாரிக்கும் நிறுவனங்கள், 50 கிலோ எடையுள்ள ஒரு பெட்டி, 500 முதல் 600 ரூபாய்க்கு வாங்குகின்றன. தற்போது, பழவேற்காடு ஏரிப்பகுதியில், ஆங்காங்கே, மத்தி மீன்கள் காயவைக்கப்பட்டுள்ளன.

**கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் ரூ.1.95 கோடிக்கு கொள்முதல்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் நடந்த பருத்தி சந்தையில் ரூ.1.95 கோடிக்கு பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி வார சந்தை நடந்தது. இதனையொட்டி பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 1,034 விவசாயிகள் 12 ஆயிரத்து 744 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். இதனை பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர்.இதில் எல்.ஆர்.ஏ., பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 4,444 ரூபாய், குறைந்தபட்சமாக 3,840 ரூபாய் என விலை போனது. இதேபோல் சுவின்

பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 4,629 ரூபாய், குறைந்தபட்சமாக 3,790 ரூபாய் என விலை போனது. கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் விவசாயிகள் கொண்டு வந்த 12 ஆயிரத்து 744 பஞ்சு மூட்டைகள், ஒரு கோடியே 95 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

**1,327 டன் யூரியாதிருச்சி வருகை**

திருச்சி, : மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு வழங்க, தூத்துக்குடியிலிருந்து ரயில் மூலமாக, 1,327 டன் யூரியா, திருச்சிக்கு வந்தது.தூத்துக்குடியிலிருந்து ரயில் மூலமாக, 21 பெட்டிகளில், திருச்சி குட்ஷெட் ரயில் நிலையத்துக்கு வந்த, 1,327 டன் யூரியா, லாரிகள் மூலம், மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாது: டெல்டா பாசனத்துக்கு வழக்கமாக தண்ணீர் திறக்கும் முன், விவசாயிகளுக்கு வழங்குவதாக போதிய உரங்கள் தருவிக்கப்பட்டு, தொடக்க வேளாண் கூட்டுறவு சொசைட்டிகளில் இருப்பு வைக்கப்படும். அதன்படி, தூத்துக்குடியில் இருந்து, 1,327 டன் யூரியா வந்துள்ளது. தொடர்ந்து மற்ற உரங்களும் தருவிக்கப்படும், என்று கூறினர்.

**மானிய விலையில் வைக்கோல் விற்பனை செய்ய அழைப்பு**

பெரம்பலூர், : கால்நடை வளர்ப்போர் நலன் கருதி, கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்குவதற்காக, பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கால்நடை மருந்தகத்தில், உலர் தீவன கிடங்கு அமைக்க, 5 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.கால்நடை வளர்ப்போர் ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ இரண்டு நகல் மற்றும் கால்நடைகளின் இருப்பு விபரம் ஆகியவற்றை அருகில் உள்ள

அரசு கால்நடை மருந்தகங்களில், கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.பதிவு செய்தவர்களுக்கு விரைவில் கால்நடை தீவனம் வழங்கும் அட்டை வழங்கப்படும். அட்டை வைத்திருந்தால் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற முடியும்.தீவன கிடங்கிற்கு உலர்ந்த வைக்கோல் வாங்கி, 10 கிலோ கட்டுகளாக கட்டி, வண்டியில் ஏற்றி வேப்பூர் கால்நடை மருந்தக வளாகத்தில் இறக்கி, அடுக்கி போர் போட்டு, இரண்டு மாதங்களுக்கு வழங்கிட விருப்பம் உள்ள விவசாயிகள், ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியை கொடுக்கலாம்.வைக்கோல் வினியோகம் செய்ய விரும்புவோர், 12ம் தேதி வரை மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியை, பெரம்பலூர் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அலுவலகம், கால்நடை மருந்தக வளாகம், பெரம்பலூரிலுள்ள வைக்கோல் விலைப்புள்ளி பெட்டியிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம், என கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.

**மகசூலை அதிகரிக்க நீர் ஆய்வு அவசியம்வேளாண் துறை அதிகாரி யோசனை**

பட்டுக்கோட்டை, : "விவசாயத்தில் மகசூலை அதிகரிக்க, பாசன நீர் ஆய்வு செய்வது அவசியம்,' என, தஞ்சாவூர் மாவட்ட சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:பாசன நீரில் உப்புத்தன்மை, களர்தன்மை என இருவகை உள்ளது. பாசனநீரில் கரையும் தன்மையுள்ள கால்சியம், மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம் தாதுக்களின் குளோரைடு, சல்பேட் அயனிகள் அதிகளவில் இருந்தால் உப்பு தன்மையும். அதே போல், சோடியம்

கார்பனேட், சோடியம்-பை- கார்பனேட், மெக்னீசியம் கார்பனேட் உப்புகள் அதிகமிருந்தால் களர் தன்மையும் ஏற்படுகிறது. இதை கண்டறிய ஆய்வு செய்வது அவசியம்.நீர் மாதிரி எடுப்பதற்கு, சுத்தமான கண்ணாடி பாட்டில் அல்லது பாலித்தீன் பாட்டிலை உபயோகிக்க வேண்டும். மோட்டார் இணைக்கப்பட்ட கிணற்றில், 10 முதல் 30 நிமிடம் தண்ணீரை ஓடவிட்டு, அந்த தண்ணீரிலேயே பாட்டிலை கழுவி, மாதிரிக்காக அரை லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டும். கண்மாய், குளங்களின் நீர் மாதிரி எடுக்கும் போது, பாட்டிலின் வாயை கைவிரலால் மூடி மூழ்கடித்து மாதிரி எடுக்க வேண்டும். கயிறு கட்டி இறைக்கும் கிணற்றில், 2 அல்லது, 3 வாளி தண்ணீர் இறைத்து பெரிய வாளி சேகரித்து மாதிரி எடுக்க வேண்டும். காலை, 9 மணிக்குள் நீர் மாதிரி சேகரிக்க வேண்டும்.நீர் மாதிரி எடுத்த பாட்டில்களை கண்டிப்பாக வெயிலில் வைக்கக்கூடாது. தஞ்சை மாவட்டத்தில், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் மண், நீர் ஆராய்ச்சி நிலையம் (தஞ்சாவூர்) காட்டுத்தோட்டம் ஆகிய இடங்களில் ஆய்வு செய்யப்படுகிறது. நீர் மாதிரி அனுப்பும் போது விவசாயியின் பெயர், கிராமம் மற்றும் முகவரி விவரம், கிணறு இருக்கும் நிலத்தின் சர்வே எண், திறந்த வெளி கிணறா, ஆழ்குழாய் கிணறா, குளமா, கண்மாயா, தண்ணீர் பாயும் நிலத்து மண்ணின் ஆய்வு விவரம் ஆகிய விவரங்கள் அனுப்ப வேண்டும்.இவ்வாறு தெரிவித்தார்.

**மண் மாதிரி சேகரிப்பு திட்டம் துவக்க விழா**

வடமதுரை : வடமதுரை வட்டாரம் கொம்பேரிபட்டியில் மண் மாதிரி சேகரிப்பு திட்ட துவக்க விழா நடந்தது. உதவி இயக்குனர் ராணி தலைமை வகித்தார். உதவி அலுவலர்கள் பெரியசாமி, சுப்பிரமணி, வேளாண் வணிகத்துறை அலுவலர் பாலசுப்பிரமணி பங்கேற்றனர்.மண் மாதிரி சேகரிப்பு திட்டத்தை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை

இயக்குனர் பாஸ்கரன் துவக்கி வைத்தார். அவர் பேசுகையில், ""மண் மாதிரிகள், ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டு, பரிசோதனை முடிவுகள், மண் வள அட்டை மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் அனுப்பி வைக்கப்படும். பண்ணை பயிர் மேலாண்மை வலை தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். இதனை விவசாயிகள் அறிந்து, பயிர் வளர்ச்சிக்கு தேவையான உரம், மருந்துகளை பயன்படுத்த திட்டமிடலாம்' என்றார்.

**ஒரே செடியில் 500 காய்கள் காய்க்கும்"லக்னோ' கொய்யா**

திண்டுக்கல் : ஒரே செடியில் 500 காய்கள் காய்க்கும் "லக்னோ 49' கொய்யாவை சாகுபடி செய்வதில் திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.இந்த கொய்யா உத்திரபிரதேசம் மாநிலத்தை பூர்வீகமாக கொண்டது. எந்த காலத்திலும் சாகுபடி செய்யலாம். இவை 3 மாதத்தில் காய்க்க துவங்கும். ஆண்டு முழுவதும் காய்க்கும். அதிகபட்சம் 3 அடி வளரும். ஒரே செடியில் ஆண்டிற்கு 500 காய்கள் காய்க்கும். ஒரு பழம் 750 கிராம் வரை இருக்கும். அடர்வு முறையில் ஒரு ஏக்கருக்கு 800 செடிகள் வரை நடலாம். ஏக்கருக்கு மூன்று லட்சம் கிலோ கிடைக்கும். அதிக லாபம் கிடைப்பதால் "லக்னோ 49' கொய்யாக்களை சாகுபடி செய்வதில் திண்டுக்கல், பழநி, ரெட்டியார்சத்திரம், பலக்கனூத்து விவசாயிகள் ஆர்வம். பலக்கனூத்து விவசாயி எம்.மனோஜ் கூறியதாவது: பழம் சுவையாக இருக்கும். கிலோ ரூ.60 க்கு விற்கலாம். இதனால் ஆண்டுக்கு ரூ.5 லட்சம் லாபம் கிடைக்கும். பராமரிப்பு செலவு குறைவு. கொய்யா கன்றுகளை ஒட்டு முறையில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு தருகிறோம். ஒரு செடி ரூ.50

**மிளகு சீசன் மும்முரம்**

தாண்டிக்குடி : தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் மிளகு சீசன் மும்முரமாக நடந்து வருகிறது.தடியன்குடிசை, பாச்சலூர், பெரியூர், காமனூர், கே.சி.பட்டி, ஆடலூர், பன்றிமலை, கொடலங்காடு, புல்லாவெளி,

மஞ்சள்பரப்பு, பூலத்தூர், கும்பறையூர் பகுதியில் மிளகு அதிக விளைச்சல் காண்கிறது. கடந்தாண்டு பருவ மழை பொய்த்து எதிர்பார்த்த மகசூல் குறைவு என்ற நிலையில் தற்போதைய கோடை மழை திரட்சியான மிளகு சரங்கள் கிடைக்க ஏதுவாக உள்ளது. மிளகு விலை ஏற்றம் விவசாயிகளுக்கு ஆறுதலை அளித்துள்ளது. வெள்ளை மிளகு எடுக்க கொடிகளில் மிளகு பழுக்க வைத்து பறித்து வருகின்றனர்.

**"ஈ' பாதிப்பில் நத்தம் மாங்காய்**

நத்தம் : நத்தம் சுற்றுப்பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மா மரங்களில் "ஈ'க்களால் தேன் ஒழுகல் எனும் நோய் பரவுகிறது.

நத்தம், சாணார்பட்டி வட்டாரங்களில் 5 ஆயிரம் எக்டேருக்கு மேல் "மா' சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பகுதியில் மா விளைச்சல் குறைந்திருந்தது. இந்தாண்டு 50 சதவீதத்திற்கும் மேல் விளைச்சல் குறைந்துவிட்டது. அதிக வெப்பத்தால் மாம்பிஞ்சுகள் உதிர்ந்து வந்தன. கடந்த வாரம் நத்தம் பகுதியில் ஓரளவு மழை பெய்தது. இதனால் மா விவசாயிகள் ஆறுதல் அடைந்தனர். இந்நிலையில் மா மரங்களில் ஒரு வகையான ஈக்கள் உற்பத்தியாகியுள்ளன. இந்த ஈக்களால் மாங்காய்களில் கருப்பு நிறத்தில் பிசின் படிந்து நோய் பரவி வருகிறது. லிங்கவாடி, வத்திப்பட்டி, தேத்தாம்பட்டி, பரளி, பொய்யாம்பட்டி, சாத்தாம்பாடி உள்ளிட்ட கிராம பகுதிகளில் இந்த நோய் அதிகம் பரவியுள்ளது. சிறுகுடி, குட்டுப்பட்டி பகுதிகளிலும் இந்த நோய் பரவ தொடங்கியுள்ளது. நோயை கட்டுப்படுத்த விசாயிகள் பூச்சி மருந்து தெளித்து வருகின்றனர். இருப்பினும் நோய் முழுமையாக விலகவில்லை. விவசாயி ஆறுமுகம் கூறுகையில், ""ஏற்கனவே மழை குறைவால் விளச்சல் குறைந்து விட்டது. தற்போது நோய் தாக்குவதால் காய்களின் தரம் குறைந்து விற்பனையும் பாதிக்கப்பட்டுள்ளது'' என்றார்.

**உரம், பூச்சி மருந்து கடை திறப்பு விழா**

கம்பம் : கம்பத்தில் சி.பி.எம்.சி.எஸ். நிறுவனத்தின் சார்பில் புதிய உரம் மற்றும் பூச்சி மருந்து கடை திறப்பு விழா நடந்தது.

தமிழகம், கேரளாவை சேர்ந்த ஏல விவசாயிகள் ஒருங்கிணைந்து நடத்தும் சி.பி.எம்.சி.எஸ்., ஒரு கூட்டுறவு நிறுவனம். இந்நிறுவனம் சார்பில் கம்பத்தில் உரம் மற்றும் பூச்சி மருந்து கடை திறப்பு விழா நிறுவனங்களின் பொதுமேலாளர் புண்ணூஸ் தலைமை வகித்தார். சி.பி.எம்.சி.எஸ்., நிறுவன சேர்மன் உதயகுமார் முன்னிலை வகித்தார். முன்னோடி ஏல விவசாயி மனோகரன் குத்துவிளக்கேற்றினார். சி.பி.எம்.சி.எஸ்., துணை தலைவர் குகன் வரவேற்றார். கடையை கம்பம் நகராட்சி தலைவர் சிவக்குமார் திறந்து வைத் தார்.கே.சி.பி.எம்.சி., இணை நிர்வாக இயக்குனர் ஜியாவுதீன்அகமது, பேயர் கிராப் சயின்ஸ் டெரிடோரியல் மேனேஜர் பாண்டியராஜா, புராஜெக்ட் மேனேஜர் ஜெகன்மோகன், ரீஜினல் மேஜேனர் தயானந்த், ரீஜினல் மார்க்கெட்டிங் மேனேஜர் முருகதாஸ், ஜெயசீல் கார்டமம் டிரையர்ஸ் பொறியாளர் ஜெயசீலன், திராட்சை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சுப்பையா, முன்னோடி வாழை விவசாயிகள் பரமசிவம், மாடசாமி உட்பட பலர் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை மண்டல மேலாளர் அன்பழகன் செய்திருந்தார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**உளுந்து சாகுபடி தொழில்நுட்பம்**



பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் உளுந்து பயறு சாகுபடி செய்யும்போது தகுந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது என வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அத்துறையினர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: **விதையின் அளவு:** டி 9, கோ 5, வம்பன் 1, வம்பன்2, டிஎம்வி 1 ஆகிய ரகங்களை தேர்வு செய்தால் 20 கிலோ விதை போதுமானது. பயிர்களின் மொத்த எண்ணிக்கை ஹெக்டேருக்கு 3,25,000 ஆகும். **நில மேம்பாடு:** நில மேம்பாட்டுக்கு ஒரு ஹெக்டேருக்கு சுண்ணாம்புக்கல் 2 டன் மற்றும் தொழு உரம் 12.5 டன் அல்லது மக்கிய தென்னை நார்க் கழிவு 12.5 டன் இடவேண்டும். தனிப்பயிராகவும், கலப்புப் பயிராகவும் சாகுபடி செய்யலாம்.**விதை நேர்த்தி:** ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனஸ் 10 கிராம் கொண்டு விதைநேர்த்தி செய்ய

வேண்டும். இல்லையெனில் கார்பென்டாசிம் (அ) திரம் 2 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து 24 மணிநேரம் கழித்து விதைக்கவும். பயனுள்ள ரைசோபியம் பாக்டீரியாக்களை பூசண மருந்து கலந்த விதையுடன் கலக்கக் கூடாது. டிரைக்கோடர்மா கலந்த விதையுடன் பயனுள்ள பாக்டீரியாக்களைக் கலந்து விதைக்கலாம். **பாக்டீரியா ராசியுடன் விதைநேர்த்தி:** தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ரைசோபியம் சி ஆர்.யு -7 (ஹெக்டேருக்கு 600 கிராம்) மற்றும் தாவர வளர்ச்சி ஊக்குவிக்கும் பாக்டீரியாக்கள் 3 பாக்கெட் மற்றும் பாஸ்போபாக்டீரியா 3 பாக்கெட் உடன் கஞ்சி கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். விதைநேர்த்தி செய்யாவிட்டால், 10 பாக்கெட் ரைசோபியம் (ஹெக்டேருக்கு 2000 கிராம்) அல்லது 10 பாக்கெட் தாவர வளர்ச்சி ஊக்குவிக்கும் பாக்டீரியாக்கள் மற்றும் 10 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா உடன் 25 கி.கி தொழு உரம் மற்றும் 25 கி.கி.மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன்னதாக இடவேண்டும்.**விதைப்பு:** விதைகளை 30-க்கு 10 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும். நெல் தரிசில் பயிரிடுவதாக இருந்தால், அறுவடைக்கு 5 முதல் 10 நாள் இருக்கும்போது விதைகளை மண்ணில் தூவவேண்டும். தூவும்போது மண்ணில் ஈரப்பதம் சரியாக இருக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியம். வரப்பு ஓரங்களில் பயிரிடுவதாக இருந்தால் 30 செ.மீ. இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். **உரமிடுதல்:** விதைப்பதற்கு முன் அடியுரமாக மானாவாரிப் பயிராக இருந்தால் ஹெக்டேருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து 12.5 கிலோ சாம்பல் சத்து மற்றும் 10 கிலோ கந்தகச்சத்து இடவேண்டும். இறவைப் பயிராக இருந்தால் ஹெக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து 50 கிலோ சாம்பல் சத்து மற்றும் 20 கிலோ கந்தகச்சத்து

இடவேண்டும். நெல் தரிசில் பயிரிடுவதாக இருந்தால் ஹெக்டேருக்கு 2 சதவீதம் டை அம்மோனியம் பாஸ்பேட்டை பூக்கும் தருணத்திலும், 15 நாள்கள் கழித்தும் தெளிக்க வேண்டும். மானாவாரி மற்றும் இறவைப் பயிர்களுக்கு டை அம்மோனியம் பாஸ்பேட் 2 சதவீதம் அல்லது யூரியா 2 சதவீதம் பூக்கும் தருணத்திலும் பின்பு 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும். மணிச் சத்தை சூப்பர் பாஸ்பேட் உரம் மூலம் இடவில்லை என்றால் ஜிப்சம் மூலமாக கந்தகத்தை இடவும். நடவு வயலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நுண்உரக் கலவையை ஹெக்டேருக்கு 5 கிலோவை ஊட்டமேற்றிய தொழுவுரமாக அளிக்கவும். உளுந்தின் மகசூலை அதிகரிக்க 1 யூரியாவை இலைவழியாகத் தெளிக்க வேண்டும். மகசூலை அதிகரிக்க வினையியல், உயிர் இயைபு வழி பண்புகள் இலைத் தெளிப்பாக விதைத்த 30 மற்றும் 45ஆவது நாளில் யூரியா 1 தெளிக்க வேண்டும். உளுந்தில் வறட்சிக் காலத்தில் இடைப்பருவ மேலாண்மை முறையாக 2 பொட்டாசியம் குளோரைடு மற்றும் 100 பிபிஎம் போரான் தெளிக்க வேண்டும். ராபி பருவத்தில் பொட்டாசியம் குளோரைடு தெளிப்பதன் மூலம் அதிக மகசூல் பெற முடியும். உயிர் உரங்கள் மற்றும் துத்தநாகம், மாலிப்டினம் மற்றும் கோபால்ட் போன்ற நுண்ணூட்டச் சத்துகள் கொண்டு விதைக்கு மேல் பூச்சு செய்யலாம். ஒரு கிலோ விதைக்கு 0.5 கிராம் பயன்படுத்த வேண்டும். 50 சதவிகித நைட்ரஜனுக்கு மாற்றாக உயிர்ம ஆதாரம் (ஏக்கருக்கு 850 கிலோ மண்புழு உரம்). பயறு வகை பயிர்களில் கார அமிலத் தன்மை 6.0க்கும் குறைவான மண்ணில் சுண்ணாம்பு அளிக்க வேண்டும்.

**நீர் நிர்வாகம்:** விதைத்தவுடன் ஒரு தண்ணீரும், பிறகு உயிர்த் தண்ணீர் மூன்றாவது நாளிலும் பாய்ச்ச வேண்டும். காலநிலை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப 10 முதல் 15 நாள்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்ட

வேண்டும். பயிரின் எல்லா நிலைகளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். துளிர்க்கும் பருவத்தில் வறட்சி இருந்தால் 0.5 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை இலைகளில் தெளிக்க வேண்டும். **இலைவழி நுண்ணூட்டம்:** டிஏபி அல்லது யூரியா, என்ஏஏ மற்றும் சலிசலிக் அமிலக் கரைசல் தெளிக்கலாம். இலை வழி நுண்ணூட்டமாக ஒரு லிட்டர் தண்ணீரில் என்ஏஏ 40 மில்லி கிராம் மற்றும் சாலிசலிக் அமிலம் 100 மில்லி கிராம் கலந்து பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும். நெல் தரிசு பயறுவகைப் பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் டிஏபி 20 கிராம் பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

மானாவாரி மற்றும் இறவைப் பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் டிஏபி 20 கிராம் அல்லது யூரியா 20 கிராம் கலந்து பூக்கும் தருணத்திலும் மற்றும் 15 நாள் கழித்தும் தெளிக்கவேண்டும்

**களை கட்டுப்பாடு:** களை முளைப்பதற்கு முன் களைக் கொல்லியான பென்டிமெத்தலின் பாசன நிலையில் ஏக்கருக்கு 3.3 லிட்டர், மழை நேரமாக இருந்தால் 2.5 லிட்டரை விதைத்த மூன்றாம் நாளில் தட்டை விசிறி நுண்குழல் கொண்ட பேக்பேக் அல்லது நேப்சாக் அல்லது ராக்கர் தெளிப்பானில் ஒரு ஹெக்டேருக்கு 500 லி. என்ற அளவில் தெளிக்க வேண்டும். 20ஆவது நாளில் ஒரு முறை கைக்களை எடுக்க வேண்டும் அல்லது களை முளைத்த பின் தெளிக்கும் களைக் கொல்லியான குயிசல்பாப் இதைல் ஹெக்டருக்கு 50 கிராம் வீதம் விதைத்த 15 அல்லது 20 நாளில் தெளிக்க வேண்டும்.

களைக்கொல்லி தெளிக்கவில்லை என்றால் விதைத்த 15வது நாளிலும் மற்றும் 30வது நாளிலும் கைக்களை எடுக்க வேண்டும். பாசன உளுந்துக்கு களை முளைக்கும் முன் ஐசோ ப்ரோட்ரான் எக்டருக்கு 0.5 கிலோ அளிக்க

வேண்டும். இதைத் தொடர்ந்து விதைத்த 30 ஆவது நாளில் கைக்களை எடுக்க வேண்டும்.

அறுவடை: முதிர்ந்த காய்களைப் பறித்து உலர்த்த வேண்டும். அறுவடை செய்யும்போது பயிர்களை வேரோடு பிடுங்க வேண்டும். இல்லையெனில் முழு தாவரத்தையும் வெட்டி எடுக்க வேண்டும். பின்னர், குவித்து வைத்து உலர்த்த வேண்டியது அவசியமானது.

**மண் புழு உயிர் உரத் தொழில்நுட்ப முறைகள்**



மண்புழு உயிர் உரத் தொழில்நுட்ப முறைகள் குறித்து, கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர்கள் வி. சஞ்சீவ்குமார், சா. இளமதி, பேராசிரியர் மற்றும் தலைவர் து. ஜவஹர் ஆகியோர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட செய்திக்குறிப்பு: அங்ககக் கழிவுகளை மண்புழுக்களால் மக்கச்செய்து உரமாகப் பயன்படுத்துவதே மண்புழு உரத் தொழில்நுட்பம்.

மண்புழுக்கள் மண்ணில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுடன், நோய்க் கிருமிகளை அழிக்கின்றன. இத் தொழில்நுட்பமானது, அங்ககக் கழிவுகளை மண்புழுக்களைக் கொண்டு மதிப்பூட்டுதல், கழிவுகளை அந்த இடத்திலேயே மேம்படச் செய்தல் மற்றும்

கழிவுகளில் உள்ள வேதியியல், உயிரியல் மாசுக்களை அப்புறப்படுத்துதல். மண்புழுக்கள் மண்ணின் மேற்பரப்பில் இருக்கும் அங்ககக் கழிவுகள், கால்நடைக் கழிவுகளிலும் மற்றும் மண்ணின் கீழ்ப்பரப்பிலும் வளரும் தன்மை உடையது. மண்ணின் மேற்பரப்பில், அங்ககக் கழிவுகள், கால்நடைக் கழிவுகளில் வளரும் மண்புழுக்களுக்கு, எப்பிஜிக் என்று பெயர்.

இந்த மண்புழுக்கள் நிறமானதாகவும் எல்லா தட்பவெப்ப சூழ்நிலைகளிலும் வளரும் தன்மை உடையவை. இதற்கு உதாரணம், மண்ணுக்கு சற்று கீழ் வளரக் கூடிய மண்புழுக்களை, என்டோஜியிக் என அழைப்பார்கள். இவை மண்ணிலிருந்து 30 செமீ ஆழத்தில் வளரும். பொதுவாக இவை மண், அங்ககப் பொருள்களை ஒன்றாகச் சேர்த்து உட்கொள்ளும். இவை மண்ணில் துளையிட்டுச் செல்லும். இதனால் மேல் மண்ணும் கீழ் மண்ணும் ஒன்றாகக் கலந்துவிடும். மண்புழுக்களால் ஏற்படும் துளைகளின் வழியே காற்றும் நீரும் வேர்மண்டலத்தை அடையும்.

மண்ணின் கீழ்பாகத்தில் வசிக்கும் மண்புழுக்கள் "அனிசிக்' எனப்படும். நீண்ட ஆழத்துக்கு (3 மீட்டர்) செல்லும் இவை, மண்ணில் உள்ள அங்ககப் பொருள்களை மண்ணின் அடிபாகம்வரை எடுத்துச் செல்லும். மண்ணின் மேற்பரப்பில் வளரும் மண்புழுக்களான யூட்ரில்லஸ், எய்சீனியா, பிரியானிக்ஸ் ஆகியவை பிரபலமானவை. இவற்றில் ஆப்ரிக்கன் மண்புழு எனப்படும் "யூட்டிரில்லஸ் யூஜினி'யே அதிக எண்ணிக்கையில் வளர்ந்து, அதிக அளவு கழிவுகளை மக்கச் செய்யும்.

**மண்புழு உரம் உற்பத்தி முறை**

**உகந்த மண்புழுவை தேர்ந்தெடுத்தல்:** மண்புழு உர உற்பத்திக்கு நிலப்பரப்பின் மேல் வாழும் மண்புழுக்களே பயன்படுகின்றன. ஆப்ரிகன் மண்புழு, சிவப்பு புழு, மக்கும் புழு ஆகியவை உர உற்பத்திக்கு சிறந்தவை. ஆப்ரிக்கன் புழு மிகவும் சிறந்தது. காரணம், குறைந்த கால இடைவெளியில்

அதிகளவு உரம், புழுக்களை உற்பத்தி செய்யும்.

**உற்பத்திக்கான இடம்:** மண்புழு உர உற்பத்திக்கு நிழல், அதிகளவு ஈரப்பதம், குளிர்ச்சியான பகுதி வேண்டும். வெயில், மழையிலிருந்து பாதுகாக்க, தென்னங்கீற்றுக் கூரை ஏற்றது.

**கட்டமைப்புகள்:** ஒரு சிமென்ட் தொட்டி கட்ட 2 அடி நீளம், 3 அடி அகலம் இருக்க வேண்டும். அந்த அறையின் அளவைப் பொருத்து நீளமானது எந்த அளவு வேண்டுமானாலும் இருக்கலாம். இம்முறையில் சரியான அளவில் ஈரப்பதத்தைப் பராமரிக்க முடியும். இதனால் தேவையற்ற நீர் வெளியேறாது.

**உற்பத்திப் படுக்கை:** நெல் உமி அல்லது தென்னை நார்க்கழிவு அல்லது கரும்புத் தோகைகளை மண்புழு உர உற்பத்திக்கான கட்டமைப்பின் அடிப்பாகத்தில் 3 செமீ உயரத்துக்கு பரப்ப வேண்டும். ஆற்று மணலை இப் படுக்கையின் மேல் 3 செ.மீ. உயரத்துக்கு தூவ வேண்டும். பிறகு 3 செமீ உயரத்துக்கு தோட்டக்கால் மண் பரப்ப வேண்டும்.

**கழிவுகளைப் போடும் முறை:** பாதி மக்கிய கழிவுகளை 30 சதவீதம் கால்நடைக் கழிவுகளுடன் கலக்க வேண்டும். ஈரப்பதம் 60 சதவீதம் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மண்புழுவை சமமாக பரப்ப வேண்டும். ஒரு மீட்டர் நீளம் ஷ் 1 மீட்டர் அகலம் ஷ் 0.5 மீட்டர் உயரத்துக்கு 2 கிலோ மண்புழு (2,000 மண்புழு) தேவை.

**தண்ணீர் தெளிப்பு:** தினமும் தண்ணீர் தெளிக்க வேண்டும். 60 சதம் ஈரப்பதம் அவசியம்.

**ஊட்டமேற்றுதல்:** அசிட்டோபேக்டர், அப்ஸாஸ்பைரில்லம், பாஸ்போபேக்டிரியா, சூடோமோனாஸ் போன்ற உயிர் உரங்கள் மூலம் மண்புழு உரத்தை ஊட்டமேற்றலாம். ஒரு டன் கழிவுக்கு ஒரு கிலோ அசோபாஸ் (அசோஸ்பைரில்லம், பாஸ்போ-பேக்டீரியா) என்ற அளவில் 20

நாள்களுக்குப் பின் மண்புழுப் படுக்கையில் சேர்க்கலாம்.

**அறுவடை:** தொட்டி முறையில், மண்புழு உரப் படுக்கையின் மேல் உள்ள மண்புழுக் கழிவை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். வாரத்துக்கு ஒருமுறை அறுவடை செய்ய வேண்டும்.

உர சேமிப்பு: அறுவடை செய்யப்பட்ட உரத்தை இருட்டறையில் 40 சதவீத ஈரப்பதத்தில், சூரியஒளி படாதவாறு வைக்க வேண்டும். இதனால் நுண்ணுயிர் அழிவைத் தடுக்கலாம்.

உர பயன்பாடு: ஒரு ஹெக்டர் நிலத்துக்கு 5 டன் மண்புழு உரம் பரிந்துரைக்கப்படுகிறது. தொட்டில்களில் போடப்படும் மண் கலவையில் மண்புழு உரம் 40 சதவீதம் கலக்கப்பட்டு பின்பு தொட்டில்களில் இடப்பட்டு நாற்றுகள் நடப்படுகின்றன. தென்னை, வாழை மரங்களுக்கு ஒரு மாதத்துக்கு 5 கிலோ இட வேண்டும்

**தனியார் சர்க்கரை ஆலைகளிடமிருந்துரூ.525 கோடி நிலுவையைப் பெற்றுத் தாருங்கள்: முதல்வரிடம் கரும்பு விவசாயிகள் மனு**

தனியார் சர்க்கரை ஆலைகளிடம் இருந்து ரூ.525 கோடி நிலுவைத் தொகையை பெற்றுத் தர வேண்டும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்திடம், கரும்பு விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

கரும்பு விவசாயிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை புதன்கிழமை சந்தித்துப் பேசினர்.

அதன் பிறகு, தென்னிந்திய கரும்பு விவசாய சங்கங்கள் கூட்டமைப்பின் செயல் தலைவர் ராஜ்குமார் நிருபர்களிடம் கூறியது:

தனியார் சர்க்கரை ஆலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக தர வேண்டிய ரூ.525 கோடியை இதுவரை வழங்காமல் உள்ளன. எங்களின் நிலைமையை

உணர்ந்து வறட்சியான இந்த நேரத்தில் நிலுவைத் தொகை முழுவதையும் மற்ற மாநிலங்களைப் போல் நேரடி மானியமாக வழங்க வேண்டும். வெளி மாநில சர்க்கரை, எரிசாராய விற்பனையை தமிழகத்தில் தடை செய்ய வேண்டும். வெளி மாநில சர்க்கரை விற்பனைக்கு மதிப்பு கூட்டு வரியில்லாதது போல் தமிழகத்தில் உற்பத்தி செய்யும் சர்க்கரைக்கு விலக்கு அளிக்க வேண்டும். வெளி மாநில எரிசாராய விற்பனைக்கு மதிப்பு கூட்டு வரியாக 2 சதவீதம் நிர்ணயித்தது போன்று, தமிழகத்தில் உள்ள ஆலைகளில் உற்பத்தியாகும் எரிசாராயத்திற்கும் அதே அடிப்படையில் வரிவசூல் செய்ய வேண்டும். ஆலைகள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்துக்கு தனியாரிடமிருந்து வாங்கும் கொள்முதல் விலையைப் போன்று வழங்கி ஆலைகளில் உற்பத்தியாகும் இணை மின்சாரத்தை தடை இல்லாமல் முழுமையாக கொள்முதல் செய்ய வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகிற விலையை நிர்ணயம் செய்யவேண்டும்.உபரி கரும்பிலிருந்து எத்தனால் உற்பத்தி செய்ய வேண்டும். பயிர் காப்பீடு திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். நிலம் கையகச் சட்டத்தை திரும்பப் பெற மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும் என கோரிக்கை விடுத்தோம். எங்களது கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உறுதி அளித்தார் என்றார் ராஜ்குமார்.

**தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி**

தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (என்சிஐபி) வாயிலாக விவசாயிகள், அதிகாரிகள் குழுக்களுக்கு சிறப்புப் பயிற்சிகள், பயிலரங்கங்கள் மூலம் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்று மக்களவையில் மத்திய வேளாண் இணை அமைச்சர் மோகன்பாய் குந்தாரியா தெரிவித்தார்.

இதுதொடர்பாக மக்களவையில் ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதி அதிமுக உறுப்பினர் கே.என்.ராமச்சந்திரன் எழுப்பியிருந்த கேள்விக்கு, அமைச்சர் மோகன்பாய் குந்தாரியா எழுத்துப்பூர்வமாக செவ்வாய்க்கிழமை அளித்திருந்த பதிலில் கூறியிருப்பதாவது:

சிறு, குறு விவசாயிகள் உள்பட அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள் மூலம் காப்பீடு வசதி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தென்னை, பனை காப்பீட்டுத் திட்டம் தவிர பிற பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களில் அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள அறிவிக்கப்பட்ட பயிர்களுக்கு பருவகாலச் செயல்பாட்டுக் கடன்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. சிறப்புப் பயிற்சிகள், பயிலரங்கங்கள், விழிப்பணர்வு நடவடிக்கைகள் மூலம் விவசாயிகள், அதிகாரிகள் குழுக்களுக்கு தேசிய பயிர்க் காப்பீட்டு திட்டம் (என்சிஐபி) வாயிலாக திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஹைதராபாதில் உள்ள இந்திய நிர்வாகப் பணியாளர் கல்லூரி (ஏஎஸ்சிஐ), இந்திய விவசாயக் காப்பீட்டு நிறுவனம் (ஏஐசி) ஆகியவை பயிர்க் காப்பீடு தொடர்பாக அவ்வப்போது பயிலரங்கங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன என்றார்.

**கோழிகள் இறந்தால் தகவல் தெரிவியுங்கள்**

கோழிகள் இறந்தால் கால்நடைப் பராமரிப்பு நிலையங்களுக்கு தகவல் அளிக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற பறவைக் காய்ச்சல் தொடர்பான கண்காணிப்புக் குழுக் கூட்டத்துக்கு, ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமை வகித்தார். இதில், அரசுத் துறை அலுவலர்கள் பேசியதாவது:

அண்டை மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் நோயின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக அனைத்து அரசுத் துறைகளும் இணைந்து செயல்பட வேண்டும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறப்பு ஏற்பட்டால் உடனே அருகிலுள்ள கால்நடை பராமரிப்பு நிலையங்களுக்கு தகவல் தர வேண்டும். அப்போதுதான் நோய் புலனாய்வு பிரிவு மூலம் ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**சிவகங்கை மாவட்டத்தில் விளைச்சல் குறைவால் மாங்காய் விலை ஏற்றம்**

சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு விளைச்சல் குறைந்துள்ளதால் மாங்காய் விலை உயர்ந்துள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் எஸ்.புதூர், சிங்கம்புணரி, காரைக்குடி, திருப்பத்தூர், காளையார்கோவில், மானாமதுரை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தோட்டங்களில் ஆயிரக்கணக்கான மாமரங்கள் உள்ளன. இவை ஆண்டு தோறும் ஏப்ரல் மாத தொடக்கத்தில் பூக்கத் தொடங்கும். இவற்றில் விளையும் மாங்காய் மற்றும் மாம்பழங்கள் ஏப்ரல் இறுதியில் விற்பனைக்கு வருவது வழக்கம். இந்த ஆண்டு மழையில்லாததால் மாங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. எனவே விற்பனைக்கு குறைந்த அளவு மாம்பழங்களே வந்துள்ளன.

சிவகங்கை மாவட்டத்தில் விளைந்த மாம்பழங்கள் உழவர் சந்தை மற்றும் நகர் பகுதிகளில் உள்ள கடைகளில் மிகக் குறைந்த அளவே விற்பனைக்கு

வந்துள்ளன. இதனால், ஒரு கிலோ மல்கோவா, காசாலட்டு, கிளிமூக்கு, பங்கனப்பள்ளி உள்ளிட்ட மாம்பழங்கள் ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டை விட 20 சதவிதம் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

**அமராவதி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை துவக்கம்**

உடுமலையை அடுத்த கிருஷ்ணாபுரத்திலுள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பாண்டிற்கான கரும்பு அரவைப் பணிகள் புதன்கிழமை துவக்கி வைக்கப்பட்டது.ஆலை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, தனி அலுவலர் இரா.இந்துமதி தலைமை வகித்தார். மடத்துக்குளம் சட்டப்பேரவை உறுப்பினர் சி.சண்முகவேலு முன்னிலை வகித்தார். சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வி.ஜெயராமன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கரும்பு அரவைப் பணிகளை துவக்கி வைத்தார்.இதுகுறித்து சர்க்கரை ஆலை அதிகாரிகள் கூறியது:நடப்பாண்டில் 75 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி, 2015-16-ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு அதிக அளவில் கரும்பு சாகுபடி செய்து ஆலையில் பதிவு செய்ய வேண்டுகிறோம் என்றனர்.நிர்வாகக் குழுத் தலைவர் எஸ்.சின்னப்பன் (எ) பழனிசாமி, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.வேலுச்சாமி, செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**புதுகை வேளாண் இணை இயக்குநர் கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு**

புதுகை மாவட்ட வேளாண் இணை இயக்குநராகப் பணியாற்றி வந்த கே. எம். ஷாஜகான். இந்திய அரசின் திட்ட கூடுதல் இயக்குநராகப் பதவி உயர்வு பெற்று சென்னைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

இவர்,ஏற்கனவே துணை இயக்குநராகவும், இணை இயக்குநராகவும் புதுக் கோட்டை மாவட்டத்தில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேளாண்துறை இணை இயக்குனர் அலுவலக அலுவலர்கள், ஊழியர்கள் வாழ்த்துக்கூறி இவரை வழியனுப்பி வைத்தனர்.

**பூத்துக் குலுங்கும் சணப்பை பூக்கள்**

இயற்கை உரத்துக்காக வேதாரண்யம் பகுதி நெல் தரிசில் சாகுபடி செய்யப் பட்டுள்ள சணப்பை பயிர்கள் தற்போது பூத்துக் குலுங்குகின்றன.

சணல் என்று அழைக்கப்படும் சணப்பை பயிர் விவசாயத்துக்கு மிகச் சிறந்த இயற்கை உரமாகப் பயனளிக்கிறது. இதன் வேர் முடிச்சுகள் மூலம் கிடைக் கும் உயிர்ச் சத்துகள் மண்ணை வளமாக்கி,பயிர்களுக்கு ஊக்கமளிக்கிறது.

இந்தப் பயிரின் தண்டிலிருந்து கிடைக்கும் பஞ்சில் (இழை) கயிறு போன் றவை தயாரிக்கப்படுகின்றன.

நெல் சாகுபடிக்கு முன்னதாக சணல் பயிரிடப்பட்டு, பூப்பதற்கு முன்பாகவே வயலில் அவற்றை மடக்கி உழவு செய்து பசுந்தாள் உரமாக விவசாயிகள் பயன்படுத்துக்கின்றனர். மானாவாரி நிலப்பரப்பான வேதாரண்யம் பகுதி யில் தகட்டூர்,பஞ்சநதிக்குளம்,மருதூர், ஆயக்காரன்புலம் போன்ற கிராமங்க ளில் விவசாயிகள் சணப்பையை பசுந்தாள் உரமாகவும்,மறு உற்பத்திக்காக விதைகளைச் சேகரிக்கவும் சாகுபடி செய்துள்ளனர். அவை தற்போது மஞ் சள் நிறத்தில் பூத்துக் குலுங்குகின்றன. கொத்துக் கொத்தாக காணப்படும் பூக்களும்,அதன் காய்கள் முற்றிய பின்னர் காற்றில் அசையும்போது ஏற்படும் ஒருவித ஓசையும் காண்போரை ஈர்க்கின்றன.

**"சர்க்கரை வளர்ச்சி நிதியம் உருவாக்க வேண்டும்'**

விவசாயிகள், நுகர்வோர்கள், ஆலை அதிபர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்க சர்க்கரை வளர்ச்சி நிதியத்தை உருவாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் அதிமுக வலியுறுத்தியது.மக்களவையில் இது தொடர்பாக புதன்கிழமை பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகளை அவையின் கவனத்துக்குக் கொண்டு வரும் நேரத்தில் திண்டுக்கல் மக்களவைத் தொகுதி அதிமுக உறுப்பினர் எம்.உதயக்குமார் பேசியதாவது:

ஒரு டன் கரும்புக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என கரும்பு விவசாயிகள் கோரி வருகின்றனர். சாகுபடிச் செலவு அதிகரித்துள்ள நிலையில், கரும்புக்கான விலை மிகக் குறைவாக ரூ.2,650 நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை. இந்தியாவில் தற்போது 26 லட்சம் டன் சர்க்கரை உபரியாக உள்ளது.

இதை அரசே எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், சர்க்கரை வளர்ச்சி நிதியம் ஒன்றை உருவாக்கி விவசாயிகள், நுகர்வோர், ஆலை அதிபர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.விவசாயக் கடன் தள்ளுபடி வேண்டும்: ஈரோடு மக்களவைத் தொகுதி அதிமுக உறுப்பினர் எஸ். செல்வக்குமார சின்னையன் பேசுகையில், "விவசாயப் பயிர்க் கடன்களுக்கான வட்டி வகிதத்தை மத்திய அரசு உயர்த்தியிருப்பது துரதிருஷ்டவசமானது.நாட்டில் வெள்ளம், வறட்சி, உரச் செலவு அதிகரிப்பு, தொழிலாளருக்கான செலவு அதிகரிப்பு உள்பட பல்வேறு பிரச்னைகளால் விவசாயிகள் சமுதாயம் ஏற்கெனவே பாதிப்பில் உள்ளது. ஆகவே, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவை விவசாயிகளுக்கு

வழங்கியுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

தகவல் பலகை சரிசெய்யப்படுமா?: கடலூர் மக்களவைத் தொகுதி அதிமுக உறுப்பினர் ஆ.அருண்மொழித்தேவன் பேசுகையில், "விருத்தாசலம் ரயில் நிலையத்தின் நடைமேடையில் அமைக்கப்பட்டுள்ள மின்னணுத் தகவல் பலகை ஆறு மாதமாக செயல்படாமல் உள்ளது. இதனால், பயணிகள் சிரமப்படுகின்றனர். மேலும், ரயில்வே ஊழியர்களுக்கு இந்த ரயில் நிலையத்தில் ஓய்வறையும் இல்லை. ஆகவே, இந்த இரு பிரச்னைகளையும் உடனடியாகத் தீர்க்க ரயில்வே அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.விவசாயக் கடன் சலுகை தொடர வேண்டும்: மயிலாடுதுறை மக்களவைத் தொகுதி அதிமுக உறுப்பினர் ஆர்.கே. பாரதிமோகன் பேசுகையில், "தற்போது விவசாயக் கடன்கள் மீதான சலுகைகளை 30.6.2015 வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

இதன் பிறகு இச்சலுகைகளை நேரடி மானியத் திட்டத்துடன் இணைக்கத் திட்டமிட்டு வருகிறது.இவ்வாறு இணைத்தால் விவசாயிகள் வட்டியுடன் கடனைத் திருப்பி செலுத்திய பிறகே சலுகைகளைப் பெற இயலும்.

இதனால், தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளபடி இச்சலுகைகளை தற்போது நடைமுறையில் உள்ளது போல் தொடர்ந்து நிரந்தரமாக அமல்படுத்த வேண்டும்' என்றார்.முந்திரிப் பழம் பதப்படுத்தும் நிலையம்: மக்களவையில் சிதம்பரம் தொகுதி அதிமுக உறுப்பினர் எம்.சந்திரகாசி விதி எண் 377-இன் கீழ் முன்வைத்த கோரிக்கையில், "தாணே புயலால் கடலூர், அரியலூர் மாவட்டத்தில் உள்ள முந்திரி சாகுபடி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவும் வகையில், தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின் கீழ் சிறப்புத் திட்டத்தை மத்திய அரசு வழங்க

வேண்டும்.முந்திரிப் பழங்களையும், முந்திரி கொட்டைகளையும் ஏனைய மாநிலங்கள் நல்ல முறையில் முழுவதுமாகப் பயன்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், தமிழக முந்திரி விவசாயிகள் முந்திரி சாறு தயாரிக்க முந்திரிப் பழங்களைப் பதப்படுத்த இயலவில்லை. ஆகவே, தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு முந்திரிப் பழம் பதப்படுத்தும் நிலையத்தை சிதம்பரத்தில் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

**சோலையார் அணையில் இருந்து பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் திறப்பது நிறுத்தம்**



கோவையில் நேற்று பெய்த மழைகாரணமாக வடகோவை மேம்பாலத்தின் கீழ் மழைநீர் தேங்கி நின்ற காட்சி.

கோவையில் ஒரு மணிநேரம் கொட்டித் தீர்த்த மழையால் அக்னி நட்சத்திர வெப்பம் தணிந்தது. மேலும் ரோடுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

கோவையில் மழை

கோவையில் கடந்த சில வாரங்களாக கடும் வெப்பம் நிலவியது. இதனால் மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். வெயிலின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து 100 டிகிரியை எட்டியது. பகல் நேரங்களில் பொதுமக்கள் வெளியில் நடமாடுவதற்கே அவதிப்பட்டு வந்தனர். வாகன ஓட்டிகளும் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். இதில் இரு சக்கர வாகன ஓட்டிகள் அனல் காற்று தாக்கத்தால் அவதிப்பட்டனர்.

இரவு நேரங்களில் வீடுகளுக்குள் கடும் வெப்பம் நிலவியது. மின் விசிறி, குளிர்ச்சாதன கருவி (ஏ.சி.) இருந்தால் மட்டுமே வீடுகளுக்குள் இருக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. இந்தநிலையில் இந்த மாதத்தின் தொடக்கத்தில் அவ்வப்போது மாலை நேரங்களிலும், இரவு நேரங்களிலும் தொடர்ச்சியாக கோடைமழை பெய்தது. வெப்பம் தணிந்தது

இதனால் வெப்பம் தணிந்து குளு, குளு சீதோஷ்ணநிலை நிலவியது. இது கோவை மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த மழை ஒரு சில நாட்கள் மட்டுமே நீடித்து நின்று போனநிலையில், வெயிலால் வெப்பத்தின் தாக்கம் மீண்டும் அதிகரித்தது. இந்தநிலையில் அக்னி நட்சத்திரம் தொடங்கியது. இது வெப்பத்தை மேலும் அதிகரிக்கும் என்ற நிலையில், அக்னி நட்சத்திரம் தொடங்கிய முதல்நாளிலேயே பிற்பகல் முதல் மாலை வரை கோவையில் பலத்த மழை பெய்தது. இதன் தொடர்ச்சியாக நேற்று மதியம் திடீரென்று கோவையில் மழை பெய்தது. கோவை மாநகர பகுதியில் ஒருமணி நேரத்திற்கும் மேலாக மழை நீடித்தது. திடீரென பெய்த இந்த மழையால் வெப்பம் தணிந்தது. இதனால் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.தண்ணீர் தேங்கியதுகாந்திபுரம், வேளாண் பல்கலைக்கழகம், துடியலூர், சரவணம்பட்டி, காரமடை, தொண்டாமுத்தூர், பீளமேடு, போத்தனூர் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

இந்த திடீர் மழையால் காந்திபுரம், 100 அடி ரோடு, அவினாசி ரோடு, மேட்டுப்பாளையம் ரோடு, புரூக்பாண்ட் ரோடு, வடகோவை ஆகிய இடங்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, வாகன நெரிசல் ஏற்பட்டது. வடகோவை மேம்பாலத்தின் கீழ் தண்ணீர் தேங்கியதால், இரு சக்கர வாகன ஓட்டிகள் கடும் அவதிக்கு உள்ளாகினர். இதேபோல் அவினாசி ரோடு மேம்பாலத்தின் கீழும் தண்ணீர் தேங்கியது.

**கோடை விடுமுறையையொட்டி ஒகேனக்கல்லில் குவிந்த சுற்றுலா பயணிகள்**

கோடை விடுமுறையை யொட்டி ஒகேனக்கல்லில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந் தனர்.



கோடை விடுமுறைதமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றான ஒகே னக்கல்லுக்கு கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் தமி ழகத்தின் பல்வேறு மாவட்டங் களில் இருந்து விடுமுறை நாட்கள் மற்றும் கோடை விடுமுறை காலத்தில் ஆயிரக் கணக்கான சுற்றுலா பயணி கள் வருவது வழக்கம். இந்தநிலையில் தற்போது பள்ளிகளுக்கு கோடை விடு முறை என்பதாலும், வழக்க மான வார விடுமுறை என்ப தாலும் நேற்று சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் ஒகேனக் கல்லில் குவிந்தனர். அவர்கள் எண்ணெய் மசாஜ் செய்து, அருவி மற்றும் காவிரி கரை யோர

பகுதிகளில் குளித்து மகிழ்ந்தனர். மேலும் அவர்கள் காவிரி ஆற்றில் பரிசலில் சென்று பெருக்கெடுத்து ஓடிய காவிரி மற்றும் ஆர்ப்பரித்து கொட்டிய ஐந்தருவி உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று இயற்கை அழகை கண்டு ரசித்தனர்.ஒகேனக்கல் களை கட்டியதுபின்னர் மீன் அருங்காட்சி யகம், முதலைப்பண்ணை உள் ளிட்ட பல்வேறு பகுதிகளை கூட்டம், கூட்டமாக சென்று சுற்றி பார்த்தனர். சுற்றுலா பயணிகள் நேற்று அதிக அள வில் வந்ததால் நடைபாதை, பஸ் நிலையம், சிறுவர் பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்ட மாகவே காணப்பட்டது. கடந்த சில மாதங்களாக வெறிச்சோடி காணப்பட்ட ஒகேனக்கல் கோடை விடு முறையையொட்டி களை கட்ட தொடங்கியது. சுற் றுலா பயணிகள் வரத்து அதி கரித்ததால் மீன் கடைகளில் மீன் வறுவல் விற்பனை படு ஜோராக நடைபெற்றது. உண வகங்கள், மீன்மார்க்கெட் உள் ளிட்ட பகுதிகளில் கூட்டம் அலை மோதியது. நேற்று சுட்டெரித்த வெயிலால் சுற் றுலா பயணிகள் காவிரி ஆற் றில்உற்சாகமாக குளித்தனர்.

கோடை விடுமுறைக்கு சுற் றுலா பயணிகள் வருகை அதிகமாக இருந்ததால் போலீ சார், ஊர்க்காவல் படையினர், மீட்புக்குழுவினர் ஆகியோர் மணல் திட்டு, ஆலாம்பாடி பரிசல் துறை உள்ளிட்ட பகுதிகளில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். மேலும் மெயின் அருவி பகுதி யில் தீவிரமாக கண்காணித் தனர். தடை செய்யப்பட்ட பகுதிகளில் சுற்றுலா பயணி கள் யாரும் குளிக்கவோ, பரி சல்கள் இயக்கவோ கூடாது என்று அறிவுறுத்தி னர்.பாதுகாப்பு உடைமேலும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு உடை அணிந்து தான் பரிசலில் செல்ல வேண் டும் என்று போலீசார் அறி வுறுத்தினர். தீயணைப்பு வாக னம் தயார் நிலையில் நிறுத் தப்பட்டு இருந்தது. கோடை விடு முறையையொட்டி சுற் றுலா பயணிகள் வருகை அதிகரிக்கும் என பரிசல் ஓட்டிகள் தெரிவித்தனர்.

**போடியில் ஏலக்காய் வரத்து அதிகரிப்பு; விலை குறைவு விவசாயிகள் கவலை**



போடியில் ஏலக்காய் வரத்து அதிகரித்ததால் விலை குறைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஏலக்காய் வரத்து அதிகரிப்பு

தேனி மாவட்டம் போடிமெட்டு பகுதிகளிலும், கேரள மாநிலம் பூப்பாறை, சாந்தம்பாறை, உடும்பன்சோலை, குமுளி, வண்டன்மேடு, தேக்கடி, தொண்டிமலை, புத்தடி ஆகிய பகுதிகளிலும் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கரில் ஏலக்காய்கள் விளைந்து வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை மாதங்களில் ஏலக்காய்கள் விற்பனைக்கு வருவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு கேரள பகுதிகளில் கூடுதல் மழை பெய்ததால், ஏப்ரல் மாதத்தில் ஏலக்காய் விளைச்சல் அதிகரித்தது. இதனால் போடி பகுதியில் உள்ள ஏலக்காய் விற்பனை செய்யும் தனியார் நிறுவனங்களுக்கு வரத்து அதிகரித்துள்ளது.

விலை வீழ்ச்சி மேலும் கடந்த ஆண்டு விளைந்த ஏலக்காய்களையும் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதனால் கடந்த சில

தினங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.850–க்கு விற்பனை செய்யப்பட்ட ஏலக்காய்கள் நேற்று ரூ.670–க்கு விற்பனையானது. இந்த திடீர் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஏலக்காய் வியாபாரி ஞானவேலிடம் கேட்ட போது, ‘இந்த மாதம் இருப்பு இருந்த ஏலக்காய்களும், உற்பத்தி அதிகரித்ததால் இந்த ஆண்டு விளைந்த ஏலக்காய்களும் அதிகமாக விற்பனைக்கு வந்துவிட்டன. மேலும் சவுதி அரேபியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி குறைந்து உள்ளது. இதனால் விலை வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. தற்போது மும்பை, கொல்கத்தா உள்நாட்டு வர்த்தகத்தை நம்பி தான் ஏலக்காய் வியாபாரம் நடைபெற்று வருகிறது’ என்றார்.

**கோவில்பட்டியில் பலத்த மழை**



கோவில்பட்டியில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் வாட்டி வதைத்தது. இந்த நிலையில் நேற்று மதியம் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. லேசான சாரல் மழை பெய்தது. மாலை 4 மணி அளவில் பலத்த காற்று வீசியது. தொடர்ந்து இடி, மின்னலுடன் மழை பெய்தது. சுமார் 1½ மணி நேரம் மழை நீடித்தது. சாலைகள், தெருக்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

கோவில்பட்டி மந்திதோப்பு ரோடு, கடலைக்கார தெரு, தெற்கு பஜார், தெப்பக்குளத் தெரு உள்ளிட்ட பகுதிகளில் சாக்கடை, மழைநீரில் கலந்து ஓடியது. இதனால் அப்பகுதிகளில் கடுமையான துர்நாற்றம் வீசியது. அக்னி நட்சத்திர வெயிலால் அவதிப்பட்ட மக்கள், இந்த திடீர் மழையால் மகிழ்ச்சி அடைந்தனர். எட்டயபுரத்தில் மாலை 6 மணி அளவில் சிறிது நேரம் லேசான மழை பெய்தது.

**தாராபுரம் பகுதிகளில் சின்ன வெங்காயம் சாகுபடிக்கு மாறி விட்ட விவசாயிகள் குறைந்த நாட்களில் அதிக வருவாய் கிடைப்பதால் ஆர்வம்**



தாராபுரம், தாராபுரம் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடிக்கு மாறிவிட்டனர்.

<u>விவசாயம்</u>

தாராபுரம் மற்றும் அதை சுற்றி உள்ள கிராமப்புறங்களில் நெல், கரும்பு ஆகிய சாகுபடிக்கு அடுத்தபடியாக மக்காச்சோளம், தக்காளி, வெண்டை, கத்தரி, மற்றும் இதர காய்கறிகள் பயிர்சாகுபடி செய்தனர். இதில் கரும்பின் அறுவடை காலம் 10 மாதங்களாகும். கரும்பு நடவு செய்த நாளில் இருந்து அறுவடை வரை இடைப்பட்ட நாட்களில் கரும்பு பயிரை நோய் தாக்கினாலோ அல்லது தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டாலோ இதற்கு

முதலீடு செய்யப்பட்ட தொகை அனைத்தும் வீணாகி விடும். கரும்பு சாகுபடி செய்து 8 மாதங்கள் முடிந்த நிலையில் கடைசி 2 மாதத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றால் பெருத்த நஷ்டம் ஏற்படும். அதுபோல் 100 முதல் 110 நாட்கள் கொண்ட நெல்சாகுபடிக்கு கதிர்வரும் வரும் வரை வயலில் தண்ணீர் நிற்க வேண்டும். நெற்கதிர்கள் வந்து பாலடைக்கும் நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால், நெல்பயிர் முற்றிலும் கருகிப்போகும். இதுபோன்ற பல்வேறு காரணங்களால் விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறினார்கள்.சின்ன வெங்காயம் மக்காச்சோளம் சாகுபடி செய்தாலும் கத்தரி, தக்காளி, வெண்டை ஆகிய காய்கறி பயிர்களும் சாகுபடி செய்தனர். இதற்கு பராமரிப்பு செலவு அதிகமானதால் விவசாயிகளுக்கு கட்டுபடியாகவில்லை. எனவே குறைந்த நாட்களில் அதிக லாபம் தரக்கூடிய சின்ன வெங்காயம் சாகுபடிக்கு பெரும்பாலான விவசாயிகள் மாறி விட்டனர்.சின்ன வெங்காயம் நடவு செய்த நாட்களில் இருந்து 70–வது நாள் அறுவடை செய்யலாம். மேலும் வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. அறுவடை செய்த பின்னர் வெங்காயத்தை விற்பனை செய்தால் பணமும் மொத்தமாக கிடைக்கும். எனவே தாராபுரம் பகுதி விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடிக்கு மாறிவிட்டனர்.

**காரைக்காலில் புரதச்சத்து மிகுந்த 'கோலா மீன்கள்' விற்பனை அமோகம்**



காரைக்காலில் கோலாமீன்கள் அதிகளவில் கிடைப்பதால், விற்பனை அமோகமாக உள்ளது. பொதுமக்கள் போட்டி போட்டு வாங்கிச்

செல்கின்றனர்.கோலா மீன்கள் அசைவ உணவு பிரியர்களுக்கு மிகவும் பிடித்தமான உணவு வகைகளில் மீன் உணவும் ஒன்றாகும். மீன்களில் பல வகைகள் இருந்தாலும் அவற்றில் எப்பொழுதும் கிடைக்கும் மீன்களை விட ஆண்டுக்கு ஒருமுறை குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே கிடைக்கும் மீன்களுக்கு எப்பொழுதுமே வரவேற்பு உள்ளது. அந்த வகையில் 'கோலா மீன்'களுக்கும் அசைவ உணவு பிரியர்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. நீரின் மேற்பரப்பில் பறப்பது போல் பாய்ந்து செல்வதால் இதற்கு 'பறக்கும் மீன்' என்ற பெயரும் உண்டு. சாதாரணமாக இந்த கோலா மீன்கள் வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டல கடற்பகுதிகளில் காணப்படுகின்றன. இந்த மீன்களின் பக்கவாட்டில் அவை பறப்பதற்கான இறக்கை போன்ற அமைப்பு அமைந்துள்ளதால், மற்ற மீன்களை போன்று இல்லாமல் இவை தண்ணீருக்கு அடியிலிருந்து எழும்பி கடலின் மேற்பரப்பில் பறந்து-பாய்ந்து செல்லும் தன்மை கொண்டது. அவை தண்ணீரிலிருந்து பறந்து, பறந்து செல்வது பார்ப்பதற்கு மிகவும் கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

களைகட்டும் சீசன்

நமது வங்காள விரிகுடா கடற்பகுதியில் குறிப்பாக காரைக்கால் உள்ளிட்ட புதுச்சேரி மற்றும் தமிழக கடல் பகுதியில் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை 'கோலா மீன்கள்' சீசன் களைகட்டுவது வழக்கம். அதன்கடி கடந்த ஏப்ரல் மாத கடைசியில் கோலாமீன் சீசன் தொடங்கியது. சீசன் தொடங்கினாலும் குறைந்தளவே கோலா மீன்கள் கிடைத்தன. தற்பொழுது கோலா மீன்கள் அதிகளவில் கிடைப்ப தால் மீனவர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எல்லா மீனவர்களும் கோலாமீன் பிடிக்க செல்வதில்லை. குறிப்பிட்ட மீனவர்கள் மட்டும் அதிகாலையில் பைபர் படகுகளில் கடலுக்கு புறப்பட்டுச் செல்கின்றனர். ஒரு படகில் சுமார் 4 அல்லது 5 மீனவர்கள், சுமார் 50 முதல்

100 கி.மீ. தூரம் வரை ஆழ்கடல் பகுதிக்கு சென்று பிரத்யேகமான 'கோலா வலை'களை பயன்படுத்தி கோலா மீன்களை பிடிக்கின்றனர். அவ்வாறு பிடிக்கப்படும் மீன்களை மாலை 4 மணி முதல் 6 மணிக்குள் கரைக்கு கொண்டு வருகின்றனர். அங்கு தயாராக இருக்கும் மீனவ பெண்கள் கோலா மீன்களை ஏலம் கேட்கின்றனர். ரூ.5 ஆயிரத்திலிருந்து இந்த மீன்கள் ஏலம் விடப்படுகிறது. அதிக தொகையாக ஏலம் கேட்பவர்களுக்கு கோலாமீன்கள் மொத்தமாக விற்பனை செய்யப்படுகிறது. ஏலம் எடுத்தவர்கள் அந்த மீன்களை கொள் முதல் செய்து பிறகு சில்லறை விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

**புரதச்சத்து மிகுந்தது**

'பிரஷ்' ஆக மார்க்கெட்டில் கிடைப்பதால் கோலாமீன் சீசன்களில் மாலை நேரங்களில் மீன் மார்க்கெட் களைகட்டுகிறது. 'பிரஷ்' மீன்களின் சுவையே அலாதியானது. இந்த மீன்களில் புரதச்சத்தும் அதிகளவில் உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே இந்த கோலாமீன்கள் கிடைப்பதால் பொது மக்களும், குறிப்பாக அசைவ உணவு பிரியர்களும் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிச் செல்கின்றனர். ஒருசிலர் மீனவ கிராமங்களுக்கே நேரில் சென்று கடலிலிருந்து மீன்கள் பிடித்து வந்து ஏலம் எடுக்கப்பட்டதும் அங்கேயே வாங்கிச் செல்கின்றனர். இந்த கோலாமீன் சீசன் அடுத்த மாதம் (ஜூன்) இரண்டாவது வாரம் வரை நீடிக்கும் என்று கூறப்படுகிறது.

தினகரன்

## துபாய் கடற்கரையில் சோலார் மூலம் இலவச இன்டர்நெட் நிலையங்கள் !



துபாய்: துபாய் கடற்கரையோரம் முதல்முறையாக இலவச வயர்லெஸ் இன்டர்நெட் வசதி துபாய் முனிசிபாலிட்டி சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பனைமரம் வடிவில் அமைக்கப்பட்டுள்ள 6 மீட்டர் உயரமுள்ள இந்த 'ஸ்மார்ட் பாம் ' நிலையங்களில் 53 மீட்டர் சுற்றளவில் 50 பயனாளிகளுக்கு உபயோகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தி மூல ம் செயல்படும் இந்த நிலையத்தின் மூலம் கடற்கரை விதிகள், வழிகாட்டல்கள், குறிப்புகள், மற்றும் கடலின் சூழ்நிலை, பருவநிலை குறித்த அறிவிப்புகள் உள்ளிட்டவைகளை அறிந்து கொள்வதோடு மொபைல் போன் மற்றும் கணினிகளுக்கு சார்ஜ் செய்து கொள்ள முடியும். உலக புகழ்பெற்ற நட்சத்திர ஹோட்டலான புர்ஜ் அல் அரப் அமைந்துள்ள கடற்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. சென்ற ஏப்ரல் மாதம் முதல் துபாய் சபீல் பூங்காவில் இது போன்ற நிலையங்கள் தொடங்கப்பட்டு விட்டது குறிப்பிடதக்கது.

**மாடுகளுக்கு வீடு தேடிச் சென்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி துவக்கம்**




சென்னை: தினகரன் செய்தி எதிரொலியால் தமிழகம் முழுவதும் கால்நடைகளுக்கு மருத்துவர்கள் வீடு தேடி சென்று கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர். தமிழகம் முழுவதும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட கறவை மாடுகள், ஆடுகள் உள்ளிட்ட கால்நடைகள் உள்ளன. கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை தடுக்க தடுப்பூசி முறையாக போடாத காரணத்தால் கடந்த 2013ம் ஆண்டு மட்டும் தமிழகம் முழுவதும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட கறவை மாடுகளும் ஆடுகளும் இறந்தன. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்ட கால்நடை பராமரிப்பு துறை கடந்தாண்டு பெரும்பாலான மாடுகளுக்கு தடுப்பூசியை முறையாக போட்டது. இதனால், கால்நடைகள் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது. இந்த நிலையில், இந்தாண்டு கால்நடை பாராமரிப்பு துறை சார்பில் கறவை மாடு, ஆடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதில் அலட்சியம் காட்டி வருவதாக கடந்த 4ம் தேதி தினகரன் நாளிதழில் விரிவான செய்தி வெளியிடப்பட்டது. குறிப்பாக, அரசு சார்பில் நடத்தப்படும் முகாம்கள் மாடு வைத்திருப்பவர்களின் வீடுகளில் இருந்து 5 முதல் 10 கிலோ மீட்டர் வரை தூரமாக உள்ளது, பல முகாம்களில் மருந்து இருப்பது இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதை தொடர்ந்து,

கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மருத்துவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம் பவுன்சூர், காஞ்சிபுரம், கூவத்தூர், உத்திரமேரூர் உள்ளிட்ட பல இடங்களில் வீடு வீடாக சென்று கால்நடை தடுப்பூசியை போட்டு வருகின்றனர். இதே போல், விருதுநகர், ராமநாதபுரம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் தடுப்பூசி போடும் பணி வேகம் எடுத்துள்ளது.